# இனமான வேந்தரவர்; என்றுமவர் புகழ்வாழ்க!



வாராத மாமணியாய்
வண்டமிழர் விழிப்புறத்
தீராத வேகத்தில்
செயலாற்றித் திகழ்ந்தவர்;
சோராத மனத்தினர்;
சொல்எழுத்து வல்லவர்;
நீராரும் ஈரோட்டு
நெருப்பான பெரியாரைச்
சீராரும் தலைவரெனச்
சிந்தையிற் கொண்டவர்!

ஊராரும் உலகோரும்
ஒப்பிலார் என்றேத்தும்
பேரறிஞர் அண்ணாவைப்
பின்தொடர்ந்த தம்பியருள்
கூரறிவு மிக்கவராய்க்
கொள்கையுரம் மிளிர்பவராய்
நீரரருவி பொழிபவராய்
நெடுந்தோற்றம் கொண்டவராய்
ஊரறிய,நாடறிய
ஒவ்வொரு மேடையாய்ச்
சீரிய திமுகவைத்
திண்மையுற வளர்த்தவர்!

ஆரியச் சூழ்ச்சியை
அறியாமை மடமையை
வேர்அரிந்து விட்டவர்;
வெண்தாடிப் பெரியாரின்
பேர்அறிந்த காலமுதல்
பெரிதாகப் போற்றியவர் பேராசி ரியர்எனும்
பெருந்தகை! இயக்கத்தின்
ஓராசி ரியர்எனில்
ஒருவரே அன்பழகர்,
நேராசி ரியர்ஆக
நெடும்பணி ஆற்றியவர்!

நாராக இல்லாமல்
நறும்பூவாய் மணந்தவர்;
சீராகத் தமிழ்கற்றுச்
செம்மலாய் மலர்ந்தவர்;
நீரான காவிரியாய்
நெடுகவே வளர்ந்தவர்;
தேராகக் கழகத்தைத்
தெருவெங்கும் செலுத்தியவர்!
போராக வந்தாலும்
பொருதங்கே வென்றவர்!

மாறாக எழுந்திடுவோர்
மல்லுக்கு நின்றிடுவோர்
யாராக இருந்தாலும்
யானையாய் நின்றாலும்
நேராக எதிர்ப்பவர்;
நெருப்பாகக் கொதிப்பவர்;
கூராகக் குத்துபவர்;
குமுறியே மொத்துபவர்;
பேராசி ரியர்;எனினும்
பெருங்கனிவில் தத்துபவர்!

ஏராளும் தமிழ்வயலில்
இனமானம் விதைத்தவர்;
சீராளும் செம்மொழியாம்
செந்தமிழை விழைந்தவர்!
சூரியனாய் எதிர்ப்போரைச்
சொல்லாலே சுட்டவர்;
மாரியாய்த் தமிழ்பொழிந்து
மனங்களைத் தொட்டவர்!
காராளும் வானத்துக்
கதிரவனாம் தளபதியை
ஊராளும் வாரிசாய்
உணர்ந்திங்கே உரைத்தவர்!

கலைஞருடன் நட்பாகக்
கைகோத்துக் கடைசிவரை
நிலையாக நடந்தவர்;
நெஞ்சிலே படர்ந்தவர்;
அலையாமல் தொடர்ந்தவர்;
அலைகளைக் கடந்தவர்;
மலையாக நின்றவர்;
மாறாமல் வென்றவர்!
சிலையாக எழுந்தாலும்
சிந்திக்க வைப்பவர்!

என்மானம் எப்போதும்
இனமானம்; வணங்காத
தன்மானம்; அதுவேதான்
தமிழ்மானம் என்றவர்!
பொன்மானே கொடுத்தாலும்
பொய்மான்என்று அறிபவர்;
நன்மானம் ஒன்றுதான்
நம்மானம்; ஆயிரம்
மின்வானம் பேரிடிகள்
மிரட்டினும்
உருட்டினும்
ஒன்றுக்கும் அஞ்சாமல்
ஒருபோதும் துஞ்சாமல்
குன்றுக்கும் குன்றானார்;
கோடுயர் கொள்கைக்கே
என்றென்றும் நெஞ்சிலே இடந்தந்தே இலகினார்!

நின்றநிலை மாறாது;
நிமிர்ந்ததலை குனியாது;
சென்றெங்கும் பணியாது;
சேவகம் புரியாது !

மன்றிலே உயர்ந்தவர்;
மதிநுட்பம் உடையவர்;
நன்றியிற் சிறந்தவர்;
நாநயம் மிகுந்தவர்!
நன்றையே உவந்தவர்;
நாடொறும் உழைத்தவர்;
தென்றலாய் எழுந்தவர்;
தீயாகப் பொழிந்தவர்;
அன்றில்போல் கலைஞருடன்
அகலாமல் பறந்தவர்;
ஒன்றையும்
விழையாத
உளத்திலே சிறந்தவர்!

முன்றுவளர் செடியல்ல;
முறிந்துவிழும் கொடியல்ல;
கன்றிவிடும் கனியல்ல;
கரைந்தோடும் பனியல்ல!
குன்றுயர் முகடவர்;
கொல்லேற்றுக் களிறவர்;
வென்றுயர் வேலவர்;
வித்தக நூலவர்;
நன்றான பாலவர்;
நன்னிழல் ஆலவர்!

இன்றவர் பிறந்தநாள்;
இயக்கத்தின் சிறந்தநாள்;
நின்றெழும் கதிரவனின்
நீள்ஒளி நிறைந்தநாள்;
ஒன்றென்றே அரசியலில்
உறுதிதான் உறைந்தநாள்;
என்றுமவர் புகழ்வாழ்க!
எழில்வானம் போல்வளர்க!

– பேராசிரியர்
**மா.செல்வராசன்**



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி கீழ்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 20.12.2024 வெள்ளிக்கிழமை | மாலை 4.00 மணி | 7 | சீர்காழி | ஏ.ஆர்.எம். மஹால், பைபாஸ் சாலை, சீர்காழி. |
| 21.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | | பட்டுக்கோட்டை | குமரன் திருமண மஹால், முத்துப்பேட்டை சாலை, பட்டுக்கோட்டை. |
| | மாலை 4.00 மணி | | அறந்தாங்கி | நூர் மஹால், கட்டுமாவடி சாலை, அறந்தாங்கி, புதுக்கோட்டை. |
| 20.12.2024 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | 8 | மானாமதுரை | அனுசுயா மஹால், மானாமதுரை. |
| | மாலை 4.00 மணி | | சிவகங்கை | மாஷா மஹால், அரண்மனை வாசல், சிவகங்கை. |
| 21.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | | திருப்பத்தூர் | காந்திமதி மஹால், சிங்கம்புனரி, சிவகங்கை. |
| | மாலை 4.00 மணி | | காரைக்குடி | அபூர்வா மஹால், காரைக்குடி |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18-12-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### ரூ.176 கோடியில் கட்டுமானப் பணிகள்!

# திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் - அறிவுசார் மையம்!

### அரசாணை வெளியிட்ட 2 நாட்களில் பொதுப்பணித்துறை டெண்டர் கோரியது !

திருச்சி, டிச. 20 - திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கான கட்டுமானப் பணிகளை 176 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது. அரசாணை வெளியிட்ட 2 நாட்களில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பொதுப்பணித்துறை டெண்டர் கோரியுள்ளது.

காவிரிக் கரையில் அமைந்த மாநகரமான திருச்சிராப்பள்ளி மாநகரில், உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கலைஞர் பெயரால் அமைக்கப்படும் என்று கடந்த ஜூன் 27ம் தேதி சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்க 290 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை வெளியிட்ட இரண்டே நாட்களில் திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டுமான பணிகளுக்கு பொதுப்பணித் துறை டெண்டர் கோரியுள்ளது. சுமார் 176 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுமான பணிகளை மேற்கொள்ள பொதுப்பணித் துறை டெண்டர் கோரியுள்ளது. தரை மற்றும் 7 தளங்கள் கொண்டதாக நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்க பொதுப்பணித்துறை திட்டமிட்டுள்ளது

### நாகையில்

# முரசொலி நிர்வாக மேலாளர் ஜி.இளங்கோ இறுதி ஊர்வலம்!

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன், கழகத்தினர், உறவினர்கள் அஞ்சலி!

நாகை, டிச. 20 - தலைமைக் கழகப் பேச்சாளரும், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளருமான ஆடுதுறை மு.உத்திராபதியின் மைத்துனர் - முரசொலி அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவின் மேலாளர் ஜி. இளங்கோ அவர்கள் கடந்த 17.12.2024 அன்று சென்னையில் மருத்துவமனையில் உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

இதையடுத்து சென்னை சூளை மேடு அண்ணாசாமி தெருவில் உள்ள அவரது வீட்டில் 17ம் தேதி இரவு வரை அஞ்சலிக்காக ஜி.இளங்கோ உடல் வைக்கப்பட்டு பின்னர் நாகை மகாலெட்சுமி நகரில் உள்ள அவரது சகோதரரான முத்துநாகலிங்கத்தின் இல்லத்திற்கு 18.12.2024 அதிகாலை கொண்டு வரப்பட்டு அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்து.

தகவல் அறிந்த நாகை மாவட்டக கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் நசீர்அகமது, நாகை நகரக் கழகச் செயலாளரும், நாகை நகர் மன்ற தலைவர் இரா.மாரிமுத்து,

தலைமைக் கழகப் பேச்சாளரும், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத்தலைவர் தா.சந்திரசேகர், தலைமைக் கழகப் பேச்சாளர் நாகை நாகராஜன், மாவட்ட கலை இலக்கிய அணி அமைப்பாளர் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் ஆர். ஆர்.குலோத்துங்கன், மாவட்ட இலக்கிய அணி துணைத்தலைவர் அங்காடிசேகர், மாவட்ட கலை இலக்கிய அணி தலைவர் இரா.தங்கதுரை, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் மரியதாஸ்,

முரசொலி மாவட்ட நிருபர்கள் நாகை ப.கந்தவடிவேல், திருவாரூர் ப.ஜாகிர்உசேன், தஞ்சை வி.சரவணன், புதுக்கோட்டை என்.அண்ணாதுரை, கரூர் ஜி. சொக்கலிங்கம், நாகை நகரக் கழக துணைச் செயலாளர்கள் வெற்றிலைகடை சிவா, பி.திலகர், நாகை நகர்மன்ற உறுப்பினர் சுரேஷ், திருவிடைமருதூர் ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சுத்தங்குடி அ.குருமூர்த்தி அரசு, கும்பகோணம் ஒன்றியக் குழு உறுப்பினர் மாடாகுடி பாண்டியன், ஆடுதுறை ரமேஷ் மற்றும் கழகத்தினர், உறவினர்கள் ஏராளமானவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்கள்.

**மருத்துவமனையில் நிவேதா முருகன் அஞ்சலி!**

ஜி.இளங்கோ அவர்கள் உடலுக்கு, 17.12.2024 அன்று சென்னை கே.எம்.சி. மருத்துவமனையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் அஞ்சலி செலுத்தினார்.

நாகை மகாலெட்சுமி நகரில் இருந்து ஜி. இளங்கோ அவர்களின் இறுதி ஊர்வலம் புறப்பட்டு நாகையில் உள்ள போலீஸ் குடியிருப்பு அருகே உள்ள மயானத்தில் ஜி.இளங்கோவின் உடல் தகனம் செய்யப்பட்டது.

### பத்திரிகையாளர் குடும்ப நிதித் திட்டத்தில் உதவித் தொகையினை உயர்த்தி அரசாணை!

# முதல்வருக்கு - தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் நன்றி!

### சங்க நிர்வாகிகள் அ.ஜெ.சகாயராஜ் – பா.பிரதீப்குமார் – இரா.இராம்ஜி அறிக்கை!

சென்னை, டிச. 20 - பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித்திட்டத்தில் உதவித் தொகையை உயர்த்தி அரசாணை வெளியிட்ட தமிழ்நாடு அரசுக்கு தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக "தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின்" மாநிலத் தலைவர் அ. ஜெ.சகாயராஜ், மாநிலப் பொதுச் செயலாளர் பா.பிரதீப்குமார், மாநிலப் பொருளாளர் இரா.ராம்ஜி ஆகியோர் வெளியிட்டுள்ள நன்றி அறிக்கையில் கூறியிருப்பதாவது :

தமிழகத்தில் உழைக்கும் பத்திரிகையாளர்கள் மீது அக்கறையோடும் கரிசனத்தோடும் நடந்து கொள்ளும் தமிழக முதல்வர் அவர்கள் மீண்டும் உதவித்தொகையினை அதிகரித்து அரசாணை வெளியிட்டது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கின்றது.

தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் களமாடி, உழைத்து, வெற்றி பெறச்செய்த சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின் நிர்வாகிகள் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விடுத்துள்ள பல்வேறு கோரிக்கைகளில் ஒன்றாக பத்திரிகையாளர்கள் மரணமடைந்தால் அவர்களுடைய குடும்ப த்திற்கு வழங்கப்படும் நிவாரண நிதியினை ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்த வேண்டும் என கோரியிருந்தனர்.

அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின்னர், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியானது, பத்திரிகையாளர்கள் 20 ஆண்டுகள் பணி புரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.10,00,000/ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார் களேயானால் ரூ7,50,000/ வழங்கப்படும்.10 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் ரூ.5,00,000/ (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் ரூ.2,50,000/ (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) என்றும் நடைமுறையிலுள்ள விதிகளின்படி, பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியினை உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணை உழைக்கும் பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் மிகுந்த மன மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், செய்தி தொடர்பு துறை சார்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் எங்களது "தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின்" சார்பாகவும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பத்திரிகையாளர்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் .

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.